www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

UPSC CSE 2018 MAINS PAPER A OCTOBER 06, 2018 TAMIL LANGUAGE QUESTION PAPER

# தமிழ் / TAMIL

## (கட்டாயத்தாள்) / (Compulsory)

| | |
|---|---|
| கால அளவு : மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 300 |
| *Time allowed : Three Hours* | *Maximum Marks : 300* |

## வினாத்தாளுக்கான விதிமுறைகள்

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும் :**

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

வினா/வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.

விடைகள் **தமிழில் (தமிழ் எழுத்தில்)** மட்டுமே எழுதுதல் வேண்டும், அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.

எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி/பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கே கோடு இடவும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*All questions are to be attempted.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in* ***TAMIL (Tamil script)*** *unless otherwise directed in the question.*

*Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.*

*Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

**Q1.** **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 600 சொற்களில் கட்டுரை வரைக.** *100*

(a) ஜனநாயகத்தில் நீதித்துறையின் பங்கு

(b) சுற்றுச் சூழலும் தற்சார்பும்

(c) உலகமயமாக்கலில் மொழியின் பங்கு

(d) இந்தியப் பொருளாதாரமும் எதிர் கொள்ளும் சவால்களும்

**Q2.** **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும் சரியாகவும் சுருக்கமாகவும் விடை எழுதுக.** *12×5=60*

உடல் வலிமையைக் காட்டிலும் உள வலிமை என்கிற ஆயுதத்தின் பலத்தை காந்திஜி வலியுறுத்தினார். அது மட்டுமன்றி பீரங்கிகளையும் எந்திரத் துப்பாக்கிகளையும் சமாளிக்க அவர் அகிம்சையைக் கையாண்டதும் காந்திஜியின் பால் உலகம் ஈர்க்கப்பட்டதற்கான காரணமாக இருந்தது. அகிம்சையின் உதவியை அவர் நாடியதற்கான முக்கிய காரணம் என்ன என்பதையும் சிந்திக்க வேண்டும். ஏனென்றால், வன்முறையின் மூலம் இந்தியாவை ஆங்கிலேயரிடமிருந்து விடுவிக்க முடியாது என்று அவர் கருதியது ஒரு நிலை; மற்றொரு நிலையில், விலங்குணர்வான உடல் வலிமையை ஒருவன் பயன்படுத்தும் வரையிலும் அவனுக்குத் தன்னை மனிதன் என்று கூறிக்கொள்ளும் உரிமை இல்லை என்ற செய்தியை அவர் மனித சமூகத்திற்குக் கூற விரும்பியதும் ஒரு

www.prepp.in

காரணமாக இருக்கலாம். வலிமையற்ற, நிர்கதியான மனிதனின் ஆயுதமே வன்முறை என்பதை முதல் வாதம் தெளிவுபடுத்தியது. ஆனால் இரண்டாவது வாதமானது மனித இன முன்னேற்றத்திற்கு அகிம்சையே மூலாதாரமாக விளங்குவதை வலியுறுத்துகிறது. இது அவன் தூய்மையானவனாக உருவாவதற்கும் உதவுகிறது.

காந்திஜியின் தலைமையில் இந்தியர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய போது, அவர்களுள் பெரும்பாலானோர் அகிம்சை ஒன்றுதான் தகுந்த ஆயுதம் என்ற கருத்துடையவர்கள். வன்மையான ஆயுதங்களை உடைய ஆங்கிலேயர்களை எதிர்கொள்ளத் தேவையான ஆயுத சக்தியும் வாய்ப்பும் தமக்கு இல்லை என்பதாலும் அகிம்சை வழிப் போராட்டம் மறுப்பின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அகிம்சை வழியை விடுத்து இந்தியாவிற்கு சுதந்திரம் வாங்கும் எண்ணம் அவருக்கு இல்லை. இந்தியாவிற்கு சுதந்திரம் வாங்குவதே பெரியதொரு குறிக்கோளாக இருந்தது.

கொடூரமான ஆயுதங்களை பயன்படுத்தி இக்குறிக்கோளை அடைய முயலுவதைக் காட்டிலும் மனித மதிப்புகளைப் பயன்படுத்தி இதனை அடைய முடியும் என்பதை மக்கள் நம்ப வேண்டும் என அவர் விரும்பினார். தன் நாட்டு மக்களின் வேதனைகளைத் தீர்ப்பது மட்டுமன்றி, மனிதனிடமுள்ள விலங்கு உணர்வை எதிர்ப்பதும் காந்திஜியின் முக்கிய

நோக்கமாக இருந்தது. வெறுப்பு, சினம், முரட்டுத்தனம் ஆகியவை எல்லாம் விலங்குகளிடமும் கூடக் காணப்படுகின்றன. அவை இந்தத் தூண்டு உணர்வுகளின் தன்மை நெருங்குவோரை எதிர் கொள்ளுகின்றன. ஆனால் மனிதன் விலங்குகளிலிருந்து மிகவும் வேறுபட்டவன், ஏனெனில் தம் உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும் தம் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள, விலங்குகளால் அடைய முடியாது. அதே சமயம் தன்னிடமுள்ள வலிமையின் துணைக்கொண்டும் பயன்படுத்துவதும் பொருத்தமாக இருக்கும். இப்போது, காந்திஜி ஏன் இந்த முடிவை எடுத்தார் என்ற கேள்வி எழுகிறது ? வேறு எந்த நாட்டிலும் இல்லாத அகிம்சை வழி இந்தியாவில் மட்டும் தோன்றியது ஏன் ? இது ஒரு தற்செயல் நிகழ்வு எனப் பலரும் இக்கேள்வியைப் புறந்தள்ளிப் போடுவர். அகிம்சை, கீழ்ப்படியாமை ஆகிய கருத்துகள் புகழ் பெற்ற அமெரிக்கச் சிந்தனையாளர்களான தோரோ (Thoreau), ரஷ்ய சாது, ஆகியோருக்கும் இருந்தது. இலக்கியப் படைப்பாளி டால்ஸ்டாய்க்கும் இந்தப் பார்வை இருந்தது. காந்திஜிக்கு தோரோ மற்றும் டால்ஸ்டாயின் கருத்துக்களோடு ஒத்ததான உணர்வு இருந்தது. இங்கு இந்தியாவிலும் கூட, காந்திஜிக்கு முன்னரே, அரவிந்தர் பொதுமக்களின் ஒத்துழையாமையும், ஒத்துழையாமைக் கருத்தையும் முன்மொழிந்தார். இருப்பினும், இந்தியாவில் மட்டும் இது ஏன்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

நாட்டில் சோதனை முயற்சியாகத் தோன்றியது என்பது சிறப்புக்குரியதாகவே உள்ளது.

இதற்குத் தெளிவான விடை உள்ளது. ஊன வலிமை என்பது உடல் வலிமையை விடச் சிறந்தது. அத்துடன் இந்த உண்மை வேறு எந்த நாட்டு மக்களையும் விட இந்தியர்களால் நன்கு உணரப்பட்டது. இந்த நாட்டில் மட்டுமே காணப்படும் [illegible] என்கிற இந்தியத் தத்துவம் தோரோ, டால்ஸ்டாய், எமர்சன், ரோமா ரோலா ஆகியோரின் உள்ளுணர்வாக இருந்தது. இந்தியக் கருத்துச் சிந்தனை உடையவர்களாகவோ அல்லது இந்தியாவின் இச்சிந்தனைப் போக்கினை அறியும் வாய்ப்புப் பெற்றவர்களாகவோ இருப்பவர்கள் மட்டுமே இதனை அறிந்து கொள்ள முடியும். தோரோ மற்றும் டால்ஸ்டாயைப் பொறுத்த வரையில் இவ்விரு நிலைப்பாடுகளும் பொருத்தமானவையாகும். இறுதியாக, இந்தியாவில் மட்டுமே உள்ள அரவிந்தரையும் நினைத்துப் பார்க்க முடிகிறது.

(அ) உலகம் காந்திஜியின் பால் ஈர்க்கப்பட்டது ஏன் ? 12

(ஆ) விடுதலை பெறுவதற்கு அஹிம்சை வழிமுறையை முதன்மைக் கருவியாக காந்திஜி கருதியது ஏன் ? 12

(இ) மனிதனுக்கும் விலங்கிற்கும் உள்ள வேறுபாடாகக் காந்தியடிகள் கருதியது என்ன ? 12

(ஈ) அஹிம்சை நெறி இந்தியாவில் ஏன் தோன்றியது ? 12

(உ) சுடமற்கள் – சீர்ப்படுபவை என்ற கருத்தை எவ்வாறு அடைய முடிந்தது ? 12

www.prepp.in

**Q3.** **பின்வரும் பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக : தலைப்பு கொடுக்க வேண்டாம்.** 60

வரலாறு மற்றும் காலம் பற்றிய சட்டங்களையும் விதிகளையும் பற்றிய அறிவு பிறிதொரு கால மனிதனை (முன்னோர்கள்) விட இந்த நவீனகால மனிதனுக்கு அதிகம். சரியாகச் சொல்லப் போனால், அவன் ஒரு வரலாற்று மனிதன். ஒரு வகையில் சொல்லப் போனால், நம் வரலாற்றறிவு நவீனத்துவம் என்பதன் ஒரு பொருட் பன்மொழி. இடைக்காலப் பண்பாட்டில் மைய நிலையாக இருந்த சமயமானது நாளடைவில் வரலாறாக வளர்ந்தது. மனிதன் இயற்கையின் சூழலில் வாழ்வதில்லை; வரலாற்றிற்கு ஏற்பவே வாழ்கிறான். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு புது நிகழ்வும், இறுதியாக நிகழ்ந்த ஒன்றிற்குப் புதிது. இன்றைக்கு நிகழும் எதுவும் இதற்கு முன்னர் நிகழ்ந்ததாக இருப்பதில்லை. மனிதனின் காலச்சிரமமான வளர்ச்சி பற்றிய இந்த அறிவு பண்டைய கிரேக்கர்களுக்கு அறியப்படாததாகவும், புதியதாகவும் இருந்தது. இந்தியச் சிந்தனையாளர்களுக்கும் இது புதியதுதான். முன்னர் மனிதன் மரபுச் சிந்தனைகளால் வழிநடத்தப்பட்டான். அது அவனது வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்தியது. இப்போது வரலாறு மனிதனின் எதிர்காலத்தை வரையறுப்பதுடன், அவனது மரபைக் கண்டறியப் பின்னாலும் திரும்பிப் பார்க்க வேண்டியுள்ளது.

வரலாற்றின் மேலாதிக்கம், நாம் இன்று உணருவதுபோல் முன்னர் உணரப்படவில்லை. மனிதன் காலம் மற்றும் வரலாறுகளால் மிகவும் களைத்துப் போனான். பத்தொன்பதாம் நூற்றாண்டில் உலகளாவிய ஆற்றலுடன் கூடிய வரலாற்று

அறிவு மனித வளர்ச்சி பற்றிய செய்தியைக் கொண்டு தந்தது. முக்தி பற்றிய செய்தியும் காலங்காலமாகவே ஒரு கேலிக்கூத்தாகத்தான் இருந்து வருகிறது. எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சட்டங்களும் விதிகளும் வாய்பாடுகளும் இன்றும் உள்ளன. எனினும் அவை அச்சுறுத்தல்களாகவும் நெருக்கடிகளாகவும் மாயா வாதங்களாகவும் அமைந்து எதிர்காலச் சூழலுக்குள் பொருந்துமாறு இல்லை. அறிவியல் பூர்வமான, தருக்க ரீதியான, பிரகாசிக்கும் அறிவு என்பது மனிதனைப் பாதுகாப்பற்ற, பயங்கர வாதத்திற்கு அடிபணிகிற, தன் எதிர் காலத்தைப் பற்றிய நிச்சயமற்றவனாக உருவாக்குவது எவ்வாறு ?

இது மட்டுமின்றி, மனிதர்களாகிய நமக்கு எதிர்காலத்தைப்பற்றி எதுவும் தெரியாது. எதிர்காலம் முழுவதையும் ஊகங்கள் மற்றும் நிகழ் தகவுகளின் அடிப்படையில் கட்டமைக்க முடியும். இவையும் கூட மனிதன் வரலாற்றறிவினால் தூண்டப்பட்டு உருவாக்கியவையாகும். ஆனால் இந்த எதிர்காலத்திற்கும் நிகழ்கால பயங்கரவாதச் செயல்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இருப்பதில்லை. எனினும் நிகழ்கால பயங்கரவாதச் செயல்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வரலாற்றுப் பூர்வமான எதிர்காலத்தைக் கணிக்க முடியும். இது சாதிப்பாகுபாடற்ற சமூகம் அல்லது கணினி அடிப்படையிலான ரோபோட் (இயந்திர மனிதன்) கொண்ட எந்திர உலகம் என்ற கற்பனைக் கனவாக இருக்கும். இதில் வேறுபாடு இல்லை. நாம் உண்மை நேரத்தில் அல்லாமல் கற்பனை நேரத்தில் (உலகத்தில்) வாழ்கிறோம். இந்த எதிர்காலத்தில் மனிதனின் இறப்பு மறந்தளிக்கப்படுகிறது என்பது

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

புதுமையான ஒன்று. ஏனென்றால் நாம் நம்முடைய இறப்பின் மீதுள்ள அச்சத்திலிருந்து விடுபட்டு எதிர்காலத்தின் நிழலில் இருக்கிறோம்.

நவீன காலத்தின் ஒரு கேலிக்கூத்தாகக் கூட இதனைக் கொள்ளலாம். ஒரு பக்கம் மனிதன் வரலாற்றினைப் பார்த்து அஞ்சுகிறான்; மறு பக்கம் கடந்துபோன இறந்த காலத்திற்கும் கற்பனையில் உள்ள எதிர்காலத்திற்கும் இடையே வரலாற்றின் உயிரோட்டம் வற்றிக் காணப்படுகிறது. ஆற்றில் மூழ்கிய மனிதன் நீரோடு தன்னைத் தொடர்புபடுத்த இயலாதது போல, வரலாற்றில் தன்னை இழந்த மனிதனுக்கு காலத்தின் முக்கியத்துவம் புரிவதில்லை. அவன் வரலாற்றின் ஆதிக்கத்திற்கு உட்படாவிட்டாலும் கூட, தன் வாழ்விற்கும் இறப்பிற்குமான ஒரு சாட்சியாக அதைக் கொள்ளத் தவறுகிறான். இப்புவியில் மனிதனுக்கு வரலாறு ஒரு சாட்சியாக இல்லாவிட்டால் அதில் பொருளில்லை. வரலாற்றறிவு என்பது மூடநம்பிக்கையாக மாறியிருக்கிறது. அவன் நிகழ்காலத்தைத் தட்டிக் கழிக்க முயலுவதுடன் அர்த்தமுள்ள எதிர்காலத்தைத் தேட முயலாமலும் இருப்பதுதான் இதற்குக் காரணம்.

ஆனால் நிகழ்காலத்தை விட்டு விலகுவது சாத்தியமா ? ஒரு பக்கம் அவன் இறந்த காலத்தையும் மறுபக்கம் அவன் உயிர் வாழும் வாழ்க்கையையும் கொண்ட வரலாற்றின் மையப்புள்ளியாக அல்லவோ நிகழ்காலம் திகழ்கிறது. அவனுடைய விதி, அவனுடைய இறந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டது என்றாலும் மற்றவர்களின் விதிகளோடு தொடர்புடைய முழுமையான எதிர்காலத்தையும் வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது. *(383 சொற்கள்)*

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

Q4. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக. *20*

நவீன காலமானது தகவல் மற்றும் தொழில் நுட்பத்தின் காலம். அறிவியல் புலத்தின் நவீனக் கண்டுபிடிப்புகளில் ஒன்றான தகவல் தொழில்நுட்பத்தின் பிரமிக்க வைக்கும் சாதனைகளால் மனித குலம் வளம் பெற்றது. இந்த அறிவியல் கருவிகளின் உதவியோடு, நம்மால் வீட்டில் அமர்ந்து கொண்டு உலகத்தின் எந்தவொரு மூலையிலிருந்தும் தகவல்களைப் பெற முடியும். தகவல் பெறும் இந்த வசதியானது, நாடுகளுக்கிடையேயான தூர இடைவெளியைக் குறைத்துள்ளது. உலகமே நம் கைப்பிடிக்குள் அடங்குவதாகத் தெரிகிறது. மேலும், உலகமயமாக்கல் மற்றும் உலக சகோதரத்துவம் ஆகிய கருத்துக்கள், இந்த அறிவியல் முன்னேற்றக் காலத்தின் நெறியுடன் இணைந்து வருகின்றன.

தபால் மட்டுமே செய்திப் போதிய வசதியில்லாத காலகட்டத்தை நாம் இன்று நினைத்துப் பார்க்க வேண்டும். அப்போது தூதுவர்கள் மூலமாகத் தகவல் பரிமாறப்பட்டது. அச்செயலுக்கு நீண்ட காலம் (நாட்கள்) தேவைப்பட்டது. அந்தக்கால வாழ்க்கை எவ்வளவு கடினமாக இருந்திருக்க வேண்டும்? இக்காலத்தில் இதை நினைத்து உணர்வது கூட எளிதான ஒன்று அல்ல. காலம் மாறியது, நாள்தோறும் புதிய சோதனைகள் நிகழத் தொடங்கின. தபால், தந்தி, தொலைபேசி, தொலைவரி ஆகியவை வளர்ந்தன. தகவல்கள் கடிதங்கள் வாயிலாக அனுப்பப்பட்டன. செயற்கை முறை வேகம்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

பிடித்தது. வானொலியும் தொலைக்காட்சியும் இதே திசையில் முன்னேறின. கணினிகளின் நுழைவால், தகவல் துறையில் ஒரு புதிய புரட்சி வந்தது. இன்டர்நெட் வளர்ந்த பிறகு, எல்லாக் கணினிகளும் ஒன்றோடொன்று இணைக்கப் பெற்றதுடன் விரைவான தகவல் தொடர்பு, எளிதான ஒன்றாக மாறியது. தகவல் உலகத்தில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. புதிய புதிய தகவல்களை உடனுக்குடன் பெற முடிந்தது. இன்று தன் விளம்பரங்களை இன்டர்நெட் வசதியின் உலகத்தில் எங்கும் எல்லா இடங்களிலும் எளிதாக விளம்பரப்படுத்த முடியும். மேலும், சொல்லப்போனால் [illegible] சக்தி, [illegible]. இன்றி அன்னிய நாடுகளுடன் கணினி / தொலைபேசி தொடர்பை பயன்படுத்தி பணிப்போர் புரியலாம். இன்று கணினி மற்றும் இன்டர்நெட் வசதி எல்லா வீடுகளிலும் அலுவலகங்களிலும் உள்ளன. அவற்றின் உதவியோடு விமானம், இரயில், பேருந்து பயணச் சீட்டுகள் அல்லது சினிமா டிக்கெட்டுகளை எளிதாகப் பதிவு செய்து கொள்ள முடியும். பதிவு நிலையைச் சோதித்தறியவும் முடியும். பாதை மற்றும் போக்குவரத்து நிலை பற்றிய தகவலையும் பெறமுடியும். இன்று இன்டர்நெட் மற்றும் அலைபேசி உதவியோடு, நாம் வீட்டிலிருந்தபடியே அனைத்துப் பொருள்களுக்கும் கோரிக்கை (order) கொடுக்கலாம். உண்மையில் சொல்லப் போனால், தகவல் தொடர்புத் துறையில் இது ஒரு [illegible], செலவு குறைந்த வழியாகும்.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

Q5. பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க. *20*

Democracy stands much superior to any other form of government in promoting dignity and freedom of the individual. Every individual wants to receive respect from fellow beings. Often conflicts arise among individuals because some feel that they are not treated with due respect. The passion for respect and freedom are the basis of democracy. Democracies throughout the world have recognised this, at least in principle. This has been achieved in various degrees in various democracies. For societies which have been built for long on the basis of subordination and domination, it is not a simple matter to recognise that all individuals are equal.

Take the case of dignity of women. Most societies across the world were historically male dominated societies. Long struggles by women have created some sensitivity today that respect to and equal treatment of women are necessary ingredients of a democratic society. That does not mean that women are actually always treated with respect. But once the principle is recognised, it becomes easier for women to wage a struggle against what is now unacceptable legally and morally.

Q6. (a) பின்வரும் வாக்கியங்களில் ஒவ்வொன்றின் இருவேறு பொருள் புலப்படுமாறு சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக : *2×5=10*

(i) பொட்டு *2*

(ii) கவி *2*

(iii) படி *2*

(iv) மாடு *2*

(v) மீன் *2*

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

(b) பின்வரும் இணைகளின் பொருள் வேறுபாடு புலப்படுமாறு ஏற்ற சொற்றொடர்களில் அமைத்து எழுதுக : *2x5=10*

(i) தாலி - தாழி *2*

(ii) மரம் - மறம் *2*

(iii) அன்னம் - அண்ணம் *2*

(iv) குளி - குழி *2*

(v) கலி - களி *2*

(c) பிரித்தெழுதுக : *1x5=5*

(i) அறுபது *1*

(ii) நிலாவொழுகு *1*

(iii) மண்ணாசை *1*

(iv) ஆட்கொல்லி *1*

(v) வாணாள் *1*

(d) எதிர்ச்சொற்கள் தருக : *1x5=5*

(i) இணங்கல் *1*

(ii) அகங்கை *1*

(iii) எளிது *1*

(iv) கீழ்மை *1*

(v) நண்புகல் *1*

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

(e) **எதிர்மறை வாக்கியமாக மாற்றுக :** *1×5=5*

(i) அவன் சத்தமாகச் சிரித்தான் *1*

(ii) அவன் நேற்று வரவில்லை *1*

(iii) அவள் எப்போதும் பொய் பேச மாட்டாள் *1*

(iv) அவள் பாடுவது இனிமையாக உள்ளது *1*

(v) அவன் அடிக்கடி சினிமாவிற்குப் போவான் *1*

(f) **பிழை நீக்கி எழுதுக :** *1×5=5*

(i) அவன் தலகணியில் தலை வைத்துப் படுத்தான் *1*

(ii) நேற்றிரவு நல்ல அடைமழை பெய்தது *1*

(iii) வெள்ளிக்கிழமை எண்ணை தேய்த்துக் குளிக்க வேண்டும் *1*

(iv) அவன் மிகுந்த இருமாப்பு உடையவன் *1*

(v) சிறுவன் வானில் காத்தாடி விட்டான் *1*